ஆகஸ்ட் மாதம் மெட்ரோ ரயில் நிலையங்களில் உள்ள

# ஷேர் ஆட்டோ, டாக்சியை 41 ஆயிரம் பேர் பயன்படுத்தினர்

## நிர்வாகம் தகவல்



சென்னை, செப். 9: மெட்ரோ ரயில் நிலையங்களில் உள்ள ஷேர் ஆட்டோ மற்றும், ஷேர் டாக்சி வாகன சேவையின் மூலம் கடந்த மாதம் 41,131 பேர் பயணம் செய்துள்ளதாக மெட்ரோ ரயில் நிர்வாகம் தகவல் தெரிவித்துள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் கடந்த ஆண்டு முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட மெட்ரோ ரயில் நிலையங்களில் பல போக்குவரத்து இணைப்பு சேவைகளை தொடங்கியது. அதன்படி, 7 மெட்ரோ ரயில் நிலையங்களில் ஷேர் ஆட்டோ மற்றும் ஷேர் டாக்சி சேவையை அறிமுகப்படுத்தியது. ஷேர் ஆட்டோ சேவைக்கு ₹5 கட்டணமும், ஷேர் டாக்சி சேவைக்கு ₹10ம் கட்டணமாக நிர்ணயம் செய்யப்பட்டது. குறிப்பிட்ட மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து இந்த சேவை 3 கி.மீ தூரம் மட்டுமே செயல்படுகிறது.

இந்தநிலையில், கடந்த ஆகஸ்ட் மாதத்தில் மட்டும் இந்த மெட்ரோ ரயில் நிலையங்களில் உள்ள வாகன சேவைகள் மூலம் 41 ஆயிரத்து 131 பயணிகள் பயணம் செய்துள்ளதாக மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அதன்படி, ஆகஸ்ட் மாதத்தில் ஷேர் டாக்சி சேவையை 4,763 பேரும், ஷேர் ஆட்டோ சேவையை 36 ஆயிரத்து 368 பேரும் பயணம் செய்துள்ளனர். ஒரு வருடத்தில் 4 லட்சத்து 86 ஆயிரத்து 205 பேர் சேவையை பயன்படுத்தியுள்ளனர்.

இதேபோல், ₹10 கட்டணத்தில் கடந்த மாதம் 6 மெட்ரோ ரயில் நிலையங்களில் சீருந்து இணைப்பு சேவையை மெட்ரோ ரயில் நிர்வாகம் அறிமுகப்படுத்தியது. இந்த சேவை தொடங்கப்பட்டு 15 நாளில் (ஆகஸ்ட் 31 வரை) மட்டும் 4 ஆயிரத்து 978 பேர் சீருந்து இணைப்பு சேவையை பயன்படுத்தியுள்ளதாகவும் மெட்ரோ ரயில் நிர்வாகம் தகவல் தெரிவித்துள்ளது.